சென்றால், அங்கிருந்து பங்களூர் போவதற்கு வசதியாக கால மாற்றங்கள் செய்து திருத்தி அமைக்கப்படுகின்றன. திருச்சியிலும், கோவையிலும், சேலத்திலும், மதுரையிலும் ஏற்கனவே இந்த மாற்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னையிலே செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் காலதாமதம் சற்று ஏற்படுகிறது. ஆனாலும், எப்படியும் சரியான முறையில் தயாரிக்க வேண்டியுள்ள காரணத்தால், இப்பொழுது அவசரப்பட்டுக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், இரவு நேரத்தில் ஓடும் நீண்டதூர பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் இரவிலே சாப்பிடுவதற்கு வசதியாக பஸ்கள் நிறுத்தப்படுவதில்லை. ஆகவே, அதைப் பரிசிலனை செய்து அந்த அந்த வழித்தடங்களில், சாப்பிட வசதியாக நிறுத்தப்படுகிறதா என்பதையும் ஆலோசித்து அதற்கு வேண்டிய வகையில் ஆராய்ந்து செய்யவேண்டும். அதோடு, இரவு நேரத்தில் 400, 500 மைல் பிரயாணம் செய்யும்போது இப்பொழுது அமைத்திருக்கும் சீட்டுக்கள் வசதியாக இல்லை. அதையும் மாற்றி அமைக்க முடியுமா என்பதையும் அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சா. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பயணிகள் பட்டினியாகப் போகவேண்டும் என்று இல்லை. எங்கேயாவது குறைகள் இருக்கலாம். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இரவில் வசதியாகப் பிரயாணம் செய்வதற்காக சொகுசு, 'குஷன்ட் ஸீட்ஸ்' அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அது இன்னும் ஒரு மாதத்திற்குள் எல்லாப் பேருந்துகளிலும் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அறிவிப்பு. 4—12—1971 அன்று அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் எடுத்த முடிவுகள் படி இந்தக் கூட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும். அது ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி நடைபெறும்.

Now, the Hon. Member Thiru K. T. K. Thangamani will call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance.

1971 டிசம்பர் 6]

THIRU K. T. .K. THANGAMANI : There are two things. I have also given notice of a privilege motion in my name. I request that it may be given preference.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவேயே நான் சொன்னேன், கொடுத்திருக்கும் உரிமைப் பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது என்று. இன்றைய அளவில் பாகிஸ்தான் படையெடுப்பைப்பற்றி ஒரு தீர்மானம் வரவிருக்கிறது. அதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு அவசரத் தீர்மானம் இன்றைக்கு அனுமதிக்கலாமா வேண்டாமா என்று ஆலோசிக்கப்பட்டது என்றும் கூறினேன். இன்றைக்கு அவற்றையெல்லாம் ஒத்திவைத்து விட்டு, பாகிஸ்தான் படையெடுப்பு பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தில், முதல்வருடையவும், மற்ற கட்சித் தலைவர்களுடையவும் கருத்துக்களைக் கூறி இன்றைய நிகழ்ச்சியை நடத்தலாம் என்றும் சொன்னேன். என்னுடைய பரிசீலனை முடிந்தவுடன் உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம்.

3. கவன ஈர்ப்பு.

நெய்வேலி லிக்னைட்டில் அதிக அளவு கந்தகம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் சேலம் உருக்காலை சம்பந்தமான வேலையில் தாமதம் ஏற்படக்கூடிய நிலை குறித்து.

MR. SPEAKER : Besides Mr. K. T. K. Thangamani, Mr. Latheef and Dr. H. V. Hande have also given call attention notices.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the reported presence of higher content of sulpher in Neyveli Lignite and doubts expressed as to its suitability for the production of steel and the apprehended delay in the progress of the work connected with the Salem Steel Plant.

THIRU M.A. LATHEEF : The reported statement of the Hon. Minister for State Steels Government of India has caused great apprehension in the minds of the people of Tamil Nadu and as such I call the attention of the Hon. Minister for Industries....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசக்கூடாது. அறிவிப்பில் இருப்பதை அப்படியே படியுங்கள்.